இதழ் - ௫௰௭

ISSN 2581-9712

உலகத்தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

திருவள்ளுவராண்டு 2051

06.01.2021

பூவிடைப்படும் பிரிவுக்குக் கூட ஆற்றா மகன்றில் நீர்ப்பறவைகளைக்
காட்டும் குறுந்தொகைப் பாடலெண் ஐம்பத்தியேழு

நாவிடைத் தவழ்ந்திடும் நற்றமிழ் பரப்பிட நமக்கு
வாய்த்த நல்லிதழ் உலகத்தமிழிதழ் - ஐம்பத்தியேழு

உள்ளடக்கம்

04 மாண்புமிகு அமைச்சர் உரை

05 ஆசிரியம்!

07 பண்டித நேருவும் பண்டைத் தமிழும்!

08 ஏழு கடலுக்கு அப்பால்!

09 அவ்வப்போது!

10 ஆளுமைத் திறனை வளர்க்கும் பழங்கதைகள்!

12 மறைமலையடிகளார் மாட்சி!

13 தேன் துளி!

14 பிரான்சு நாட்டில் தமிழ் மொழியின் வளர்ச்சி!

15 திருவருட்பா முதலைந்து திருமுறைகள்!

16 ஆங்கிலம் அரும்பிய அரசும்–வாழ்வும்!

17 கார்த்திகை விளக்கீடு!

18 தமிழக அரசின் விருதுப்பட்டியல்!

19 மதுரை காமராசர் பல்கலைக்கழகம்!

உள்ளடக்கம்

20

சிலப்பதிகாரம்–ஆங்கிலம்!

21

குழந்தை இலக்கியம்!

22

Everlasting Tradition !

23

பதிகங்களைப் படியுங்கள் !

25

பூமழை !

27

நாடக வேந்தர் சேக்சுபியரின் மொழியாக்கப் பட்டியல்!

28

அறிவரசன் துணை அகராதி!

இணைய தமிழ்ச் சங்க விழா!

மாண்புமிகு அமைச்சர் உரை - 10.10.2018

திரு.க.பாண்டியராசன்

மாண்புமிகு தமிழாட்சி மொழி, தமிழ்ப்பண்பாட்டுத்துறை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்

சொற்குவை

அண்மையில் சொற்குவை என்ற திட்டம் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கணங்கள், இலக்கியங்கள், நிகண்டுகள், உரைகள், கல்வெட்டுக்கள், ஊடகங்கள், இணையம் முதலியனவற்றி லிருந்தும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு உள்ளிட்ட அயல்நாடுகளிலும், தமிழகத்திலும் வழங்கும் வட்டார வழக்கு களிருந்தும், கலை, அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம் உள்ளிட்ட பல துறை களிலிருந்தும் பத்து இலட்சத்திற்கும் குறை யாமல் சொற்களைத் தொகுத்து அகர வரிசையில் பட்டியலிட்டு இணையத்தில் தேடுதல் வசதியுடன் இலவசமாக அளிப்பது இத்திட்டத்தின் முதன்மை நோக்கம் ஆகும்.

இவ்வாறு தொகுக்கப்பட்ட சொற்களுக் கான இலக்கணக் குறிப்பு, பொருள் விளக்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும், எடுத்துக்காட் டுக்கள் முதலியன அளிப்பதும் இத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சொற்குவைத்திட்டம் விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு வரும் என்பதை இங்கு குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடை கிறேன்.

உலகில் எந்த ஓர் அமைப்பு அல்லது நிறுவனமாக இருந்தாலும் அது தோன்றுவதற்கு முன்பு மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை நிலை நிறுத்த வேண்டும். அதற்கு மாநாடுகள் கருத்தரங் குகள், சிந்தனை மேடைகள் மிக முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தமிழ் இணைய தளங்கள் அதிகமாகத் தோன்றிய காலக் கட்டத்தில் அதன் வளர்ச்சிப் பணியை எட்டுவதற்கும் பல கருத்தரங்குகளும் மா நாடுகளும் அரசு மற்றும் தனியார் அமைப்புகளால் நடத்தப்பட்டுள்ளன. அது போலவே இந்தக் கருத்தரங்கமும் தமிழ் இணையதள வெளிப்பாட்டில் ஒரு புதிய மைல்கல்லாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமில்லை.

நன்றி!

வணக்கம் !

புத்தாண்டை வரவேற்போம்!

இருண்ட ஆண்டாக இருந்த 2020 முடிந்து, நம்பிக்கைச் செய்தியுடன் வருகிறது இந்த 2021ஆம் புத்தாண்டு.

கரோனோ என்ற கொடிய நச்சு நுண்மையின் விளையாட்டிலிருந்து மீள்வதற்கு தடுப்பூசி வந்த செய்தியுடன் 2021 ஆம் ஆண்டு பிறக்கிறது. கோவிடு - 19 பாதகக் கொலைக் கருவியாய் 2020 ஆம் ஆண்டிற்குள் நுழைந்து, பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறித்தது. அந்த அரக்கப்பிடி கடந்த ஆண்டின் இறுதியில் கொஞ்சம் தளர்வது போல் தோன்றுகிறது. இந்தியாவில், இந்நோயினால் ஆட்பட்டவர்களின் எண்ணிக்கைக் குறைந்து வரும் செய்தியும் தளர்த்தப்பட்டு வரும் செயன்மைகளும் இனிய செய்தியாக வரத் தொடங் கியுள்ளது இன்னும் குறுகிய காலத்தில் முற்றிலும் தடுப்பதற்குரிய செயல்கள் உலகில் ஒளிக்கீற்றுகளாகத் தெரியத் தொடங்கியுள்ளன. நம்பிக்கை ஞாயிறு கீழை நாடுகளில் முதலில் தொடங்கி, இன்னும் இருண்டிருக்கும் மேலை நாடுகளை நோக்கி மலரத் தொடங்கிவிடும் என நம்பலாம். நாம் உருக்குலைக்க உள் நுழைந்த புயல்களைப் புறந்தள்ளினோம்; வெள்ளம், நிலச்சரிவு என்ற இயற்கைச் சீரழிவுகளால் பல நல்லுயிர்களை இழந்திருக்கிறோம். சொல்லொணாத் துயரில் கட்டுண் டோம்; குழந்தைகளின் கல்வி, இளைஞர்களின் மேற்படிப்பு அனைத்தும் கணினியின் கைக்குள் அடங்கின. இருக்குமிடத்திலும் புகலிடம் இழந்தோர், புலம் பெயர்ந்தோர் பலர் திக்குத்தெரியாமல் திணறினர்; வாழ்வின் துணையிழந்தோர், வறுமையில் சிக்கியோர் என வையகமே உருக்குலைந்து வருந்தியிருந்தது.

2021 இல், தடுப்பூசி முறையை உலகம் முழுவதும் வழங்குவதற்குரிய விரைந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மக்களின் நடமாட்டம் இயல்பாகத் தொடங்கியுள்ளது. உருமாறிய கடுங்கரோனா மாறிச் சுழலும் நுண்மிகளால் இதனை மணிக் கரோனா என்று கூறலாம் என்ற "புதிய அச்சம்" முளைக்கத் தொடங்கினாலும் எளிதில் கட்டுப்படுத்தி விடும் வழிமுறைகளை நாம் அறிந்திருப்பதால் உறுதியாக நாம் வென்றெடுக்க முடியும்.

பாலைவனத்தின் நெடுந்தொலைவுகளிலே,
நம் தாகத்தைத் தணிக்க நீருற்றுகளுடன்
நம் பசியைத் தீர்க்க பேரீச்சம் கனிகளுடன்
நமக்குப் படுக்க இடந்தரப்
பனி நிழல்களுடன்
சோலை வனங்கள் காத்துக் கிடக்கின்றன

என்ற கவிஞர் இன்குலாப் கவிதை நம்பிக்கை வரிகளாக அமையும் ஆண்டினை வரவேற்போம்.

உயிர்ப்பு, மலர்ச்சி, வளர்ச்சி மாற்றம் என்பவை என்றும் தொடர்ந்து கொண்டிருப்பவை. புதிதாய் அரும்பும் புல்லின் வெளிகளில் கால வலைப்பின்னல் களைப் பிரித்துச் சிரிக்கும் பச்சை இலைகளில், ஓவியப் புன்னகையாய் ஒரு பக்கம் தலைசாய்ந்து வியப்பில் விழிக்கும் மலர்க்கூட்டங்கள் என வருங்காலம் நம் துயரங்களைத் துடைத்து விட்டுப் புதுப்பொலிவுடன் மலர வேண்டும். களைகள் நீக்கப்பட்ட விளையும் நிலமாக வீறு கொண்டு வரும் புத்தாண்டில் புதுப்புதுப் பயிர்கள் செழித்தெழ வேண்டும். நம்பிக்கையின் ஒளி விழுதுகள் நம் மக்களின் மனதில், வரும் புத்தாண்டில், வாழ்க்கைக்கு வழிவிடும் வாயில்களைத் திறக்க வேண்டும்.

“வாய்மைசால் அறிவின் வாய்த்த
மந்திர தந்திரத்தோடும் தீமை தீர்
ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவரோடும்,
தூய்மை சால் புணர்ச்சி பேணி”

என்ற கவிச்சக்கரவர்த்தி கம்பரின் வாக்கிற்கிணங்கத் தூய்மையும் வாய்மையும் நிறைந்த அரசின் அரவணைப்பில் நம் பாரத நாடு “பொருந்து செல்வமும், கல்வியும் பூத்து” உயர வேண்டும். நிகழ்காலம் என்னும் தூரிகை கொண்டு சென்ற கால அனுபவம் என்னும் வண்ணம் தோய்த்து காலத்திரையில் வரைய இருக்கும், வரைந்து வரும் சித்திரமே வருங்கால உலகம். அறிவையும் அனுபவத்தையும் உணர்வையும் உள்ளத்தையும் குறிக்கோளையும் தன்னம்பிக்கையையும் புதிய ஆற்றலையும் புதுப்புது உருவாக்கங்களைப் படைப்பதற்குப் பக்குவம் தந்ததுதான் சென்ற ஆண்டின் பயனாகும்.

கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்

எனப் புத்தாண்டில் அனைவர் வாழ்வும் சிறக்கட்டும் என விழைவோம்.

பண்டித நேருவும் பண்டைத்தமிழும்

சங்கத்தமிழ் 3,03,373

மூதறிஞர் நீ.கந்தசாமிப் பிள்ளை

கண்ணிலும் நீர் துளிர்த்தன. மிகவும் தாழ்ந்த குரலில் நீ கூறிய செய்யுளின் ஆசிரியரின் காலம் எது என்றார். 800 ஆண்டுகளுக்கு முன்பு என்பாரும் உளர் 1000 ஆண்டுகளுக்கு முன்பு என்பாரும் உளர் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அதை விடுங்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர், இது போதும் என்றார். நான் சொல்லியதைப் புத்தகத்தில் காட்ட எண்ணி புத்தகத்தைக் கொண்டு வருகின்றேன் என்றேன். மிகவும் அமைதியாக வேண்டாம், சொல்லியது போதும் நம்புகிறேன் என்று சொல்லிக் கொண்டு வருத்தமாக நின்றார்.

காலமும் ஆகிவிட்டது. பிரியும்போது வருத்தமான பகுதியைக் கேட்டுப் பிரிய வேண்டாம் என்ற எண்ணத்துடன் தங்கள் கருத்துக்களில் பலவற்றுக்கு ஒத்த தமிழ் நூற் பகுதிகள் விரைவாக என் கருத்துக்கு வருகின்றன. ஒன்றை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன் என்று கூறித் தாங்கள், தங்கள் மகளுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் **"வானத்திலே உலவுகின்ற நிலவு ஓர் ஆசிரியனாக உலகத்திற்கு நல்ல கருத்துக்களைப் போதிக்கின்றான்"** என்று எழுதியிருந்தீர்கள் என்பதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "ஆம் ஆம்" நினைவிற்கு வருகிறது என்றார்.

நான் தொடர்ந்து இதே கருத்தை இன்னும் விளக்கமாக 1800 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு புலவர், **'தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும், மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும் அறியாதோரையும் அறியக் காட்டி, திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து'** என்ற செய்யுளை விளக்கிக் கூறினேன்.

அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. 'ஐயா, மிகவும் நல்லது. தமிழின் பெருமையை மூன்று வாக்கியங்களில் சுருக்கிச் சொல்லுங்கள் என்றார். நான் தொன்மையான தூய மொழி, காலம் இடம் என்ற பகுப்புக்களை யெல்லாம் கடந்த கருத்துக்களை இனிமையாக விளக்கி உள்ளதும் விளக்கக்கூடிய ஆற்றலுடையது மான மொழி, தன்னைத் தெரிந்து கொள்ள நேர்ந்தவர்கள் தெய்வ மொழியெனப் பாராட்டும் பண்புடைய மொழி என்றேன்.

வளரும்...

57

ஆத்திசூடி | ATTISUDI | آثي سودي | 阿媞邸立 |
| ആത്തി ചൂടി | आत्तिचूड़ी | ఆత్తిచూడి | ಆಭೂಡಿ

தீவினை அகற்று
Disdain Evil Deeds
لا تكسل
唾棄惡行
നിന്ദനം ഒഴിവാക്കുക
पापकर्म त्यजें।
పాపమైన కార్యములను చేయకు
ಪಾಪವಾದ ಕೆಲಸಗಳನ್ನು ಮಾಡಬೇಡಿ

"தோளை வலியுடையது ஆக்கி - உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி -
அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் - கட்டுமாறா
உடல் உறுதி தந்து - சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல் - ஒளி
நண்ணித் திகழும் முகம்தந்து - மத
வேளை வெல்லும் முறைகூறித் - தவ
மேன்மை கொடுத்து அருளல் வேண்டும்"

முனைவர் ந.அருள்
இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை

தன்னிகரில்லாத தமிழ்த் தாரகை

திருக்கோயிலாலும் திருமுறைப்பாடல்களாலும் புகழோங்கியுள்ள திருவையாற்றில் தன்னிகரில்லாத தமிழ்த் தாரகையாகத் திருமதி. டி.பி.இராஜலட்சுமி விளங்கினார்.

பஞ்சாபகேச ஐயருக்கு மகளாகப் பிறந்து ஏழு வயதில் திருமணம் செய்து வாழ முடியாது கணவனால் விலக்கப்பட்டவர். அந்நாளைய பெண்களுக்கு நேர்ந்த கொடுமையான அவலத்தில் இதுவும் சேரும்.

சோர்வடையாமல் தான் கற்ற கலைத் திறமையால் நாடக உலகத்துக்கு வந்து சங்கரதாச சுவாமிகள் நாடகத்தில் நடிக்கத் தொடங்கினார். ஏழு வயதிலேயே நாட்டியம், இசை முதலிய கலைத் திறமையால் நாடகத் தந்தை சங்கரதாச சுவாமிகளுடைய ஆதரவினால் நடிகை டி.பி.இராஜலட்சுமி துணிவாக நடிக்கத் தொடங்கினார். நாடக உலக நடிப்பு என்று மட்டும் இல்லாமல் தாமே எழுதிய கமலா என்ற திரைப்படத்தை இயக்கிய பெருமையும் இவரைச் சாரும்.

1936 - களில் நாட்டு மக்களால் இராஜலட்சுமி அம்மையார் பெரிதும் பாராட்டப்பட்டார். கல்வி, கலை, நாட்டியம், படத்தில் நடிப்பது இயக்குவது என்று அருங்கலை அரசியாக டி.பி.இராஜலட்சுமி திகழ்ந்தார்.

இராஜலட்சுமியின் பெயரைப் பார்த்துத் தான் இராஜகுமாரி, இராஜதிலகம், இராஜேஸ்வரி என்ற முறையில் அந்நாளில் நடிகைகள் தங்கள் பெயரை மாற்றிக் கொண்டார்கள்.

கலைமாமணி விருது பெற்ற பிறகு தன் பேரனுக்குக் கணையாழி வேண்டும் என்பதற்காகப் பதக்கத்தையே உருக்கி விற்றுத் தந்த மாதர் திலகம் டி.பி.இராஜலட்சுமி வாழ்க்கையில் சோர்வடைந்து 1964 - ஆம் ஆண்டில் மறைந்தார்.

கலை உலக வாழ்க்கை என்பது பளிங்குக் கண்ணாடியில் பயிலும் பரதநாட்டியத்தைப் போன்றது. கண்கட்டிக் கயிற்றில் நடக்கும் வித்தையாகவும் ஒரு காலத்தில் இருந்தது. இன்று கல்வியும், கலையும், தேசியமும், மொழிப்பற்றும், அறிவாற்றலும் ஒன்றாகக் கலந்து திரை உலகத்துக்கு நாளும் பெருமை சேர்த்திருக்கிறது. ஏன் நம் தமிழ் நாட்டுக்கே தலைவர்களைத் தந்திருக்கிறது.

தன்னிகரில்லாத தாரகை கலைமாமணி டி.பி.இராஜலட்சுமி புகழ் போற்றுவோம்!.

ஆளுமைத் திறனை வளர்க்கும் பழங்கதைகள் !

முனைவர் சோமலெ சோமசுந்தரம்
அமெரிக்கா

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;"

என்ற மகாகவி பாரதியாரின் கவிதையை ஒரு புதிய கண்ணோட்டத்தோடு பார்க்கும் மண் இது. இந்த மண்ணில் பழங் கதைகளை வெளிப்படையாகச் சொல் லியும், கேட்டும், படித்தும் பயனடைந்து வருகிறார்கள் அமெரிக்காவின் அடுத்த தலைமுறையினர்.

1861-65 கால கட்டத்தில் நடைபெற்ற அமெரிக்காவின் வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையேயான உள் நாட்டுப் போரில் திருப்பு முனையாக அமைந்த போர்க்களம்

கெட்டிஸ்பர்க். ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட போர் வீரர்கள் உயிர் இழந்த 34,000 வீரர்கள் படுகாயம் அடைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க அமெரிக்க நிலமாகும்.

போர் முடிந்த நான்கு மாதங்களுக்குப் பிறகு, இரண்டு மணி நேரம் இரயிலில் பயணம் செய்து கெட்டிஸ்பர்க் சென்று பேசிய அதிபர் லிங்கனுடைய உரையின் நீளம் இரண்டே நிமிடங்கள்; 271 வார்த் தைகளே! “கடுகு சிறுத்தாலும் காரம் குறை யாது" என்பதற்கேற்ப அந்த **"Gettysburg Address"** அமெரிக்க வரலாற்றில் நிலைத்த சாசனமாகிவிட்டது.

தெற்குப் படையின் (Confederates) தலைவர் இராபர்ட் லீ ஏன் தோல்வி அடைந் தார், வடக்கின் வெற்றி வாகையின் இரகசியம் என்ன? அன்றைய போர்க்களம் வெறும் சரித்திரச் சுற்றுலாப் பகுதியாக மட்டுமன்றி, வரலாற்றை ஆய்வு நோக்கில் கற்பிக்கும் அறிவகமாகச் செயற்பட்டு வருகிறது.

போரிலும் சரி, வாழ்விலும் சரி, வெற்றியை விடத் தோல்வியே பல நல்ல பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் என்பதை நினைவுப் படுத்தும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப் படுகின்றன. 1863 - இல் மூன்று நாட்கள்

நடைபெற்ற அந்தக் கொடிய போரில் நேர்ந்த முக்கிய முடிவுகளையும் அவற்றின் விளைவுகளையும் ஆராய்ந்து, தொழிலில், பணியில், வாழ்வில் வரும் பின்னடைவு களைச் சமாளிக்க நம் நிலையை விரைவாக எப்படி மாற்றிக் கொள்ள வேண்டுமென் பதை வலியுறுத்த கெட்டிஸ்பர்க் போர் நினைவு இன்றும் தொடர்கிறது!

மற்றவர்கள் நம்மைப் பின்பற்ற நாம் என்ன செய்ய வேண்டும், கருத்துவேறு பாடுகளை எவ்வாறு சமாளிப்பது, பண் புள்ள மனிதர்களையும் பணியாளர்களை யும் எப்படி உருவாக்குவது போன்ற தலை மைப் பண்புகளை வளர்க்கும் கெட்டிஸ்பர்க் பயிலரங்கங்களில் பங்கு பெற Pfizer, Apple, Microsoft போன்ற முன்னோடி நிறுவனங் களின் அடுத்த தலை முறைத் தலைவர்கள் முற்றுகை இடுகின்றனர் இந்தப் போர்க் களத்தை!

மூவேந்தர்களுக்கிடையே நிகழ்ந்த போர்கள், வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் தொடுக்கப்பட்ட போர்கள், ஆங்கிலேயரை எதிர்த்துக் கண்ட அமைதிப் போர்கள் என பாஞ்சாலங்குறிச்சி, வேதாரண்யம், செஞ்சி போன்ற எண்ணற்ற போர்க்களங்கள் தமிழகத்தில் உள்ளன. அங்குள்ள பழங் கதைகள் எப்போது நம் அடுத்த தலை முறைக்குப் பாடம் கற்பிக்கும் பயிற்சிப் பட்டறைகளாகும் என்று நினைக்கத் தூண்டுகிறது.

அறிஞர் ந.ரா.முருகவேள்

நூலறி புலவன், நல்லிசைப் புலவன், பலர் புகழ் நன் மொழிப் புலவர் ஏறு, தொல் லாணை நல்லாசிரியன், நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய், அஞ் சொல் நுண் தேர்ச்சிப் புலவன், ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன், நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி, நுண்மாண் நுழைபுலம் என வரூஉம் சங்க நூற் செய்யுட்டொடர்கள் பலவற்றிற்கும் இற்றை ஞான்று முற்றிலும் பொருந்தத் தக்க இலக்கியமாக இலங்கு பவர் அடிகளேயெனின் அவர் தம் தமிழ்ப் புலமையை யாமோ அளவிட்டுரைக் கற்பாலம்?

வடமொழி வன்மை

அடிகள் தமிழில் எத்துணைப் புலமை உடையரோ அத்துணையளவிற்கு ஒத்த புலமை வடமொழி, ஆங்கிலம் என்னும் இரு பிற பெரு மொழிகளிலும் தகுதி உடைய ராதலின் தமிழறிஞர் வரிசையின் மட்டும் அடி.களை வைத்துக் கருதுதற்கில்லை.

**நாடன் என்கோ ? ஊரன் என்கோ ?
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ?
யாங்ஙனம் மொழிகோ? ஓங்குவாட்
கோதையை ..."**

எனப் பொய்கையார் என்னும் புலவர் சேரமான் கோக்கோதை மார்பனை என்னென்று பாடுவது என்று அறியாமல் மயங்கியது போல, அடிகளைத் தமிழ்ப்புலவர் என்பதோ வடமொழி வல்லவர் என்பதோ ஆங்கில அறிஞர் என்பதோ என்னென்று கூறுவதென்று அறியப் பெறாமல் நாமும் மயங்க வேண்டும் நிலையில் அடிகள் திகழ்கின்றார்!!



வடமொழியில் உள்ள பல்வேறு வேதம், ஆகமம், உபநிடதம், மிருதி, பிராமணம், இதிகாசம், புராணம், என்னும் எவற்றையும் அடிகள் முறையாகக் கற்றுத் துறை போயவர் என்பது காளிதாசர் எழுதிய சாகுந்தல நாட கத்தினை அழகிய இனிய தூய செந்தமிழில் தெளிவாகச் செய்துள்ள மொழிபெயர்ப்பாலும், தென்புலத்தார் சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், தமிழாசிரியர் தழுவிய வடமொழி நூல்கள், சைவசித்தாந்த ஞானபோதம் என்பனவறாலும் நன்கினி துணரப்படும்.

வளரும்...

தேன்துளி –1

உலகச் செம்மொழிகளில் தலைசிறந்த மொழியாக விளங்கும் தமிழ் மொழி தனித்துவம் பெற்ற மொழியாகும். உலகின் எந்த மொழிக்கும் இலக்கியச்சங்கம் எனப்படும் புலவர் அவையம் இருந்ததாகச் சான்றுகள் இல்லாத காலத்திலேயே முச்சங்கங்கள் கண்டது தமிழ் மொழி.

சங்கம் நிலவியதைப் பிற்கால இலக்கியங்கள் குறித்தாலும் அதனை உறுதி செய்வது கலிங்கத்தை ஆட்சி புரிந்த காரவேலனின் கல்வெட்டாகும். அசோக மாமன்னன் கால கட்டத்தில் “திரமிள சங்கம்” இருந்ததை இக்கல்வெட்டுக் குறிப்பிலிருந்து தமிழ் மொழியின் தொன்மையை நன்கு அறிய இயலும்.

தேன்துளி - 2

வயதாக வயதாகத்தான் நமது மதிப்பும் அதிகரிக்கிறது.
தலை முழுதும் வெள்ளி நரை !
வாயெல்லாம் தங்கப்பற்கள் !
சிறுநீரகத்திலோ (வைரக்) கற்கள் !

குருதியிலோ (இனிக்கும்) சர்க்கரை !
பாதங்களில் காரீயம் !
இரத்த நாளங்களில் இரும்பு !
வற்றாத இயற்கை (எரி)வாயு !

இத்துணை செல்வங்களையும் சேர்த்து வைப்போமென்று
நாம் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டோம்.
முன்பெல்லாம் உடல்நலமே சிறந்த செல்வமாகும்.
இன்றைக்கு முதுமை தேய்ந்த செல்வமாகும் !

பிரான்சு நாட்டில் தமிழ் மொழியின் வளர்ச்சி!

பேராசிரியர் சச்சிதானந்தம்
பிரெஞ்சு மொழியியல் நிறுவனம், பாரீசு

19

அகராதிகள் : இருமொழி, மும்மொழி

பிரெஞ்சு - தமிழ் - ஆங்கிலம்

33. தெளிவான பிரெஞ்சு இலக்கணம்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம், பியாட்றிசு ஞானா

ஆண்டு : 2010

பதிப்பகம் : Gnana

34. Le Tamoul Parle

ஆசிரியர் : பி.சென்னமோக சுந்தரம்

ஆண்டு : 2013

பதிப்பகம் : L’Harmattan

35. தெரியத் தெரிய த் தெரியாமை தெரியும்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2014

பதிப்பகம் : Gnana

36. ஐரோப்பாவில் தமிழ் கற்றலும் கற்பித்தலும்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2015

பதிப்பகம் : IIES

37. ஐரோப்பாவில் தமிழ்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2016

பதிப்பகம் : IIES

38. திருக்குறள் பொருட்புலக் கட்டமைப்பு

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2016

பதிப்பகம் : IIES

39. ALAGAPPA - un bel ESPRIT

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2017

பதிப்பகம் : Alagappa University

40. செவ்விலக்கியமும், விபுலானந்தமும்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2018

பதிப்பகம் : IIES

வளரும்...

திருவருட்பா முதலைந்து திருமுறைகள் !

உரைவேந்தர் ஔவை துரைசாமி

26

ஊடுதற்கோர் இடம் காணோன் உவக்கும் இடம் உளதோ
உன்னிடமும் என்னிடமும் ஒரிடமா தலினால்
வாடுதற்கு நேர்ந் டிலோ மாட்டாமை யாலும்
மனம்பிடியா மையினாலும் சினந்துரைப்பேன் சிலவே
கூடுதற்கு வல்லவன் நீ கூட்டி எனைக் கொண்டே
குலம்பேச வேண்டாமென் குறிப்பனைத்தும் அறிந்தாய்
நாடுதற்கிங் கென்னாலே முடியாது நீயே
நாடுவித்துக் கொண்டருள்வாய் ஞான சபாபயே

எனவரும் பாடலில் மணிவாசகனார் சென்ற திருக்குறன் அடிச்சுவட்டில் செல்லுகின்ற சிறப்பினையும் அவர் கூறிய நயங்களுக்கு மேலும் நயம்பெறச் சொல்லுதலையும் காண்கின்றோம்.

ஊடுவது உன்னோடு உவப்பதும் உனை என்னும்போது இறைவன் வேறு தான் வேறு என்ற நிலை காணப்படும். இருவரும் ஒருவரே என்றால் ஊடுவதற்கு இடம் ஏது? ஊடுதற்கே இடம் காணோன் என்றபின் உவக்கம் இடம் எப்படி இருக்க முடியும்.

மேலும் உன்னை நாடுவதற்குக் கூட எனக்குச் சுதந்திரமில்லை. அதனால் நீயே நடுவித்துக்கொள் என்கிறார். தந்த சுதந் ரமின்மை என்ற பகுதியில் எடுத்து வைத்த அடியைக் கூட பெயர்த்து வைக்க எனக்குச் சுதந்திரம் இல்லை. அப்பகுதியிலேயே வரும்,

'பாட்டுவித்தால் பாடுகின்றேன்
பணிவித்தால் பணிகின்றேன்'

என்ற பாடலில்,

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ

என்ற அப்பரடிகளின் தாண்டகம் தாண்ட வம் ஆடக் காண்கிறோம்.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்ட வரும் என்பது உலகப் பொதுமறை. வேண்டாமை வேண்டும் என்ற பிறகு அதனையும் வேண்டும் என்ற வாய்ப்பாட்டால் கூறு வதா கூடாது என்று கொண்டு வேண்டாமை வேண்டுவதும் இல்லான் என்றார்.

வளரும்...

ஆங்கிலம் அரும்பிய அரசும் —வாழ்வும்… !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம்
திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

1

இங்கிலாந்தின் அரசியல் வரலாறு

ஐரோப்பாவின் வடக்கில் எங்கோ ஒரு மூலையில் முளைத்த ஒரு கிளைமொழி, உலகத்தையே ஆளுகின்ற மொழியாகக் கிளைத்து வளர்ந்த கதை சுவையான கதை.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வளம் பெற்று இலக்கியம் படைத்த தமிழ் மொழியின் சொந்தக்காரர்களாகிய நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்ற கதையாக அந்தக் கதை அமைவதால், அந்த மொழியின் பிறப்பையும், அதன் போராட்டத் தையும், நெகிழ்ச்சியையும், திடத்தையும், வளர்ச்சியையும் விவரிப்பது, அழிவுப் பாதையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் தமிழ்மொழியை அழியாமல் காக்க உதவலாம் என்று எண்ணி, ஆங்கிலமாக மலர்ச்சி பெற்று உலகை ஆளும் மொழியாகத் திகழ்கின்ற ஒரு பெரு மொழியின் கதையைத் தமிழ்த் தாய்க்கு வாழ்வுதரும் பொருட்டுச் சுருக்கமாக உங்களுக்குச் சொல்ல முன்வருகின்றேன்.

அது நடந்த தடத்தில் நடக்கின்ற என்னோடு நீங்களும் வாருங்கள். ஒரு மொழியின் பிறப்பையும், வளர்ப்பையும் வளர்ச்சியையும் அறிந்து கொள்ள வேண்டு மென்றால் அந்த மொழியின் சொந்தக் காரராகிய ஆங்கிலேயரின் நாடான பிரித்தானியா என்ற நாட்டின் பழைய வரலாற்றையும் அரசியலையும் புரிந்து கொள்வது அவசியம்.

வரலாற்றுப் பின்னணியைப் புரிந்து கொள்வதன் மூலம்தான் அந்த நாட்டின் மொழியின் வளர்ச்சி, தளர்ச்சி, முன்னேற் றம், பின்னிறக்கம், போராட்டம் என்பன வற்றை விளங்கிக் கொள்ள முடியும்.

ஆகவே ஆங்கில மொழியின் பிறப்புக்கும் வளர்ப்புக்கும் பின்னணியாக அமைந்த நாட்டின் அரசியல் வரலாற்றை முதற்கண் சுருக்கமாகப் பார்ப்போம்.

வளரும்…

கார்த்திகை விளக்கீடு!

அறிஞர் ந.ரா.முருகவேள்

5

பாலை பாடிய பெருங் கடுங்கோ

இவ்வாறே பெருங்கடுங்கோ என்னும் சங்க காலச் சான்றோரும், கார்த்திகை விழாவின் சிறப்பினைத் தமது கவிதைகளிற் புகழ்ந்து போற்றுகின்றார். இவர் சேரமான் மரபினர்.

பாலைத்திணை பாடுதலில் வல்லவர். ஆதலிற் "சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ" எனவும் இவர் வழங்கப்பெறுவர். "முள்முருக்கு கோங்கு அதிரல் பாதிரி மரவம் முதலிய சிறந்த பூக்கள் பலவும் மலர்ந்து மணங்கமழ்ந்து இலங்கும் காட்டின் இயல்பு, பரவுக்கடன் பூண்டோரால் பலதிற நறுமலர்கள் தூவி வழிபடப் பெறும் தெய்வத்தின் திருக்கோயிலைப் போலத் திகழ்கின்றது ' என்னும் கருத்து அமைய,

" மராஅ மலரோடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம ! "

- அகநானூறு, 99

எனப் பாடியருளுதலால், இப்பெருந்தகையும் நக்கீரர் போலத் தெய்வவுணர்வின் மிக்க சிந்தையையுடையவர் எனத் தெரிகின்றது.

இவர் தமது பாடல்களில், இரண்டு இடங்களில், கார்த்திகை விழாவினைக் கவின் மிகச் சுட்டுகின்றார்.

" அருவி யான்ற உயர்சிமை மருங்கிற்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த நிலவமொடு
நிலையுயர் பிறங்கல மலை இறத் தோரே "

- அகம், 185.

" கண்டியின் வாழியோ குறுமகள் நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அந்த காடே "

- நற்றிணை , 202.

வளரும்...

தமிழக அரசின் விருதுப் பட்டியல் !

தமிழ்ச் செம்மல் விருது

தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களுக்கு அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் வழங்குதல். (விருதுத் தொகை ரூ. 25,000/- மற்றும் தகுதியுரை வழங்கப்படும். மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 பேருக்கு வழங்கப்படும்).

XXVI

விருதுநகர் மாவட்டம்

வ.எண்.	ஆண்டு	விருதாளர்
1	2015	முனைவர் கா.இராமச்சந்திரன்
2	2016	கவிஞர் ஜெ.இராமநாதன்
3	2017	திரு.சா.ஜோசப்
4	2018	முனைவர் க.அழகர்
5	2019	முனைவர் இரா.இளவரசு

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்!

முதறிஞர் வ.சுப.மாணிக்கம்

3

வளர்ந்த நாடுகளிற் காணப்படாத முறை கோணலாகும். கலைக் கல்லூரிகளில் ஒரு பயிற்று மொழியிற் படித்த மாணவர்கள் மருத்துவக் கல்லூரியிலும் பொறியியற் கல்லூரியிலும் முதுகலை வகுப்பிலும் தொடர்பின்ற வெறொரு பயிற்றுமொழியிற் படிக்க வேண்டிய கட்டாயமிருப்பது சுமை யான கல்வித் திட்டமாகும்; அறிவுக் கொல் லியுமாகும். ஆதலின் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை, அ முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை ஒரு மொழி - தமிழ் மொழியே தமிழ் மா நிலத்துப் பயிற்று - மொழியாக வளர வேண்டும், வளர இடங்கொடுக்க வேண்டும்.

எல்லாத்துறையும் தமிழ்மை ஆதல் தான் கல்விமுறை எனினும் இன்று ஒரே நாளில் அவ்வளவையும் கட்டாயமாகத் தமிழ்மை ஆக்கிவிட முடியுமா? இடைக்கால வழி ஒன்றுண்டு.

கலைக் கல்லூரிகள் வேளாண்மை, மருத்துவம், பொறியியல் முதலான தொழிற் கல்லூரிகள் அனைத்திலும் படிப்படியாகவும் விரைவாகவும் எல்லாத் துறையிலும் ஆய்வு படிப்பிலும் இணையான வகுப்புகள் (Parallel Courses) தமிழிலும் ஆங்கிலத்திலும் சில ஆண்டுகள் நடத்த வேண்டும்.

இங்ஙனம் இணையாக நடந்து செல்லின், செவ்விய காலப்போக்கில் தொல் தமிழ் எல்லாத் துறையிலும் தனிப் பயிற்று மொழியாகும் நல்லூழை எய்தும், மக்கட்கும் தமிழ்மேல் நன்னம்பிக்கை உண்டாகும். ஆதலின் பொது மக்கள் பல்கலைக் கழகத்தின் புதுப் பயன்களை நுகரவும், தொல்காப்பியர் கூறிய செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தில் தமிழ்மொழி முதற் கண் எல்லாத்துறையிலும் இணை மொழியாகப் பின்னர் நிறை மொழியாய் வளரவும் செம்மையான திட்டங்களை உருவாக்க வேண்டும் என்பது என் நனவான விழைவு. இதற்கு எல்லாத் துறையாசிரியர்களின் ஒத்துழைப்பையும் நாடுகின்றேன்.

வளரும்...

சிலப்பதிகாரம் - ஆங்கிலம் !

பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்
தலைசிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழக அரசு

26

Canto - 7

Is her face fishy eyes, arching
brows, scud of locks,Eros' dart
in one? Or Moon fearing snake
hid in salty marshy hamlet?
…..12

On shore throw of chanks' roar
her spear eyes blood red fear,
frisk either side!Isn't She Yama
in a tiny fishing folk town!
…..13

Or to smart all with Kaama's,
a fairie scaring fowls swooping
to pick stench-fish in bud rich
arbor snaring as shore-maid??
…..14

Everything Smarted Me

(Strumming Yaazh imperiously)

Hero Speaks

(Dear friend)

fragrant flower, sands pollen,
speech dulcet,soft breasts,full
moon face,bows of brows,flash
waist ineffable, all hurt me.
…..15

Wavy port,dune beach, garland
scent, woody grove, curly locks
musk laden,moon round face
fair carp eyes all pinned me!
…..16

Chanks in sea-pan,shore scent
grove,open bud, her lone walk,
pearly tooth, full moon face,
bosom pair tease me all in all
Miss not your midriff
Land-Mood complex
…..17

To Continue...

குழந்தை இலக்கியம் !

முனைவர் தேவி நாச்சியப்பன்

28

சண்டை, சச்சரவுகளின்றிக் குழந்தைகள் ஒற்றுமை என்னும் பண்புள்ளவர்களாக உருவாக வேண்டும்.

மதம், மொழி, ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகளைக் குழந்தைகள் உணரும் வகையில் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

ஒற்றுமை பற்றிய குழந்தைப் பாடல்களைப் படிக்கின்ற, பாடுகின்ற குழந்தை உள்ளத்தில் ஒற்றுமை ஓங்கும்.

" இந்து,முசுலீம்,கிறித்துவம்
ஈரம் விளைக்கும் புத்தருடன்
சாந்தம் விளங்க நன்நெறியில்
சார்ந்து புழங்கும் மலைநாடு
... .
மதங்கள் பலவாய் இருந்தாலும்
மனங்கள் எல்லாம் ஒன்றாகி
இதமாய் மக்கள் கூட்டுறவாய்
இணைந்தே வாழும் மலைநாடு "

கவிஞர் கலியபெருமாள் மதவேறுபாடின்றி இணைந்து வாழ வழி சொல்லும் குழந்தைப் பாடலாக இது அமைந்துள்ளது.

" எத்தனை விழுதுகள் ஆலினிலே
எனினும் ஆலம் ஒருமரமே
எத்தனை மொழிகள் இந்நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே "

என்பது கவிஞர் பூவண்ணன் பாடல், மொழிகள் வேறுபடினும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதை ஆலமரத்தைச் சான்று காட்டிப் பாடுகிறார்.

"ஏழை, பணக்காரர்
என்று எண்ணாமல்
ஒட்டி வாழ்வது சமத்துவம்
தோழமை கொண்டு
பகைமை ஒழித்துத்
தோள்கள் சேர்வது சமத்துவம்"

என்று வேறுபாடற்ற நிலையில் சமத்துவத்துடன் வாழும் முறையைப் பாடுகிறார் கவிஞர் சி.வேணுகோபால்.

வேற்றுமை எண்ணம் நீங்கிய குழந்தைக்கு,

"ஒருகை ஓசை எழுப்பாது
ஒற்றுமை என்றும் தோற்காது.
ஓடி வாருங்கள் தோழர்களே
ஒன்றாய்ச் சேருங்கள் நண்பர்களே"

என்று கவிஞர் முத்தெழிலன் பாடுகிறார்.

" உலகம் நமது பெருவீடு - இதை
உணர்ந்தவர் உள்ளம் தேன்கூடு
பலவகை மக்கள் வாழ்கின்றார் - இது
பாங்குடன் விளங்கும் பூந்தோட்டம் "

என்று உலகைப் பெரிய வீடாகக் குழந்தைக்கு அறிமுகம் செய்கிறார் தமிழறிஞர் கவிஞர் தணிகை உலகநாதன்.

வளரும்...

8. Sarrow in a Trail

The Revolution was over in two years and he attained power but he fell ill and was bed-ridden.

The story of Lenin in Russia is the same.

During the course of the Revolution, Lenin was healthy. In a few months after attaining power, he was bed-ridden and shortly after he died.

Many politicians have had the Herculean strength to address gatherings travelling by rail or even on foot.

In the cause of revolution they end up in prison. Thereafter they enjoy good health.

At a time when they should have peace of mind after securing their political ends, their health fails then miserably.

One of my friends produced a film for the first time which was a great success. From the next film onwards it was a reversal and he has not recovered from the loss yet. Take another film producer He had been in the field from the time of the silent movies.

At the outset, many of his films were unsuccessful. With great difficulty he came to Madras to make a film. "His fate will be decided only through this film." -- was the general talk That move turned out to be a roaring success.

A new actress became a star from then.

Success had its gorgeous sweep. From then onwards, he had the Midas touch.

Is it possible to find one who has not seen suffering from birth till death?

Close your eyes and think.

If one stage is like that, the other is like this!

The 'Rise' is a conferment of the Lord. The 'Fall' is also a trial which is the Lord's own device. If everything one dreams of comes true, then there is no need for trust in God.

To Continue...

சேக்கிழார்

செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என உலகுக்கெல்லாம் உரைத்து உள்ளந் தொறும் இனிக்கும் தெள்ளுதமிழ் மணக்கும் பாடல்களால், சிவனடியார்கள் பற்றிய தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணம் பன்னி ரெண்டாம் திருமுறையாக வகுத்து அமைக்கப் பட்டுள்ளது.

"தூக்கு சீர்திருத்தொண்டர் தொகை விரிவாக் கினார் சொல்லவல்லபிரான்" எனச் சேக்கிழார் பற்றிக் குறிப்பிடுவர் சான்றோர்கள். சேக்கிழார் என்பது குடிப்பெயர். அவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பது. கூடல்கிழான், புரிசைகிழான், வெண்குளப்பாக்கிழான் என்று கூறும் மரபில் வைத்துப் போற்றத்தக்கது சேக்கிழார் மரபு. இவர் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதையும் அநபாயச் சோழர் காலத்தில் பெரிய புராணம் இயற்றி, திருத் தொண்டர் புராணத்தைத் தில்லையில் அரங் கேற்றியதாகவும் வரலாறு கூறுகிறது. "கருங் கடலின் மீனை அளவிடலாகும்; வானத் தார கையை அளவிடலாம்; சங்கரன் தாள் தமது சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை அளவிட நம் சேக்கிழாருக்கு எளிதலது தேவர்க்கும் அரிதே” எனப் புகழ்ந்து கூறுவர்.

இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன் என அழைக்கப்பட்டவன். இச்சோழ மன்னனுக்குத் திருநீற்றுச் சோழன் என்றொரு பெயரும் இருந்துள்ளது. இவன் பேரம்பலம் பொன் வேய்ந்தமையால் பேரம்பலம் பொன்வேய்ந்த சோழன் எனப் புகழ் பெற்றிருக்கிறான். சோழ மன்னன் பற்றிய கல்வெட்டுகளும் உலா நூல்களிலும் இவரைப் புகழ்ந்து கூறப்பட் டுள்ளது. பல சிற்றூர்கள் அநபாயநல்லூர் என்று பெயரிடப்பட்டுள்ளன. இவரது காலம் 1133 முதல் 1150 வரை எனக் கணிக்கப் பட்டுள்ளது.

இரண்டாம் குலோத்துங்கன் அவையில் ஒட்டக்கூத்தர் பெரும்புலவர் இருந்ததாகவும் இவர் மகன் இரண்டாம் இராசராசன் காலத்திலும் அவரே அவைப்புலவராக இருந்து, விக்கிரம சோழன் வரை இருந்து மூவர் மீது உலாப் பாடியிருக்கிறார். இவர்கள் காலத்திலும் சோழர் கோ நகரம் கங்கை கொண்ட சோழபுரம் எனத் தெரிகிறது. எனினும். இம்மன்னர் காலத்தில் சிதம்பரம் பெருஞ்சிறப்படைந் திருந்தது. ஈடும் எடுப்பும் அற்ற திருத் தொண்டர் புராணமும் கூத்தர் செய்த உலாக்களும் பரணியும் இக்காலத்துச் சிறந்த இலக்கிய நூல்களாகும். அநபாய சோழனைப் பற்றி இராசராச சோழன் உலாவிலும், தக்கயாகப்பரணியிலும் விரிவாகப் பாடப்பட் டுள்ளன.

சேக்கிழார் சிறுவயதில், அவரின் தந்தை சோழ மன்னனின் அமைச்சராக இருந்தார். சோழர் அமைச்சரவையில் கடலினும் பெரிது எது ? உலகினும் பெரிது எது ? மலையினும் பெரிது எது ? என வினவியுள்ளார். தந்தையிடம் அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் திருக் குறளில் இருக்கும் மூன்று குறள்களையும் பதிலாகத் தந்தார்.

" பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது".

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது ".

" நிலையிற் திரியாது அடங்கியான் தோற்றம்

மலையினும் மானப் பெரிது " .

அவரது அறிவாற்றலை மெச்சி, அரசன், உத்தம சோழப்பல்லவன் எனப் பட்டம் வழங்கினார். சேக்கிழாரின் பிறப்பிடம் குன்றத் தூர். திருநாகேச்சுரம் முதலிய இடங்களில் வழிபாட்டுத்தலங்களும் அமைந்துள்ளன.

சேக்கிழாரின் பெரியபுராணம், திருத் தொண்டத் தொகையையும் திருத்தொண்ட திருவந்தாதியையும், மெய்யடியார்களின் வரலாற் றையும் இதில் பாடியுள்ளார்.

அதிலுள்ள திருநாட்டுச் சிறப்பு எனப்படும் வாழ்த்துப்பாடல் புத்தாண்டுப் பிறந்ததன் நல்லெண்ணமாக நாம் நலம் பெறப் படித்து இன்புறுவோம்.

மங்கல வினைகள் எங்கும்

மணஞ்செய் கம்பலைகள் எங்கும்

பங்கய வதனம் எங்கும்

பண்களின் மழலை எங்கும்

பொங்கொலிக் கலன்கள் எங்கும்

புதுமலர் பந்தர் எங்குஞ்

செங்கயல் பழனம் எங்குந்

திருமகள் உரையுள் எங்கும்

இராகம்: மணிரங்கு தாளம்: ஆதி என்பது அப்பாடல்.

நாடு முழுவதும் மகிழ்ச்சிகரமான செயல்களே எங்கும் நடக்கட்டும். மணம் வீசும் மலர்கள் பூத்துக் குலுங்கும். பெண்களின் முகங்கள் தாமரையாய் மலர்ந்திருக்க குழந்தைகள் பாடலி சைக்க வயல் வளமும் செல்வமும் என்றும் எங்கும் நிறைந்திருக்க இறைவன் அருள் புரியட்டும் எனக்கூறும் இப்பாடல் நம் அனை வருக்கும் நோயற்ற வாழ்வையும் துன்பமற்ற மனநிலையும் தந்தருள வேண்டும் என வேண்டி வணங்கிக் கொள்வோம்.

வளரும்...

1. *2020-ன் நிறைவு நாள் இதழை இன்று 30.12.2020 படித்து மகிழ்ந்தேன்.*

"இல்லக் கதவுக்குள்
சில நேரம் அடைபடுகிறது;
இல்லாத கதவின் வழியாகச்
சில நேரம் விடைபெறுகிறது;
ஒருநாள் கடல் ஆகி
மானுடத்தைக் குனிந்து பார்க்கிறது "...

...அழகிய முரண்கொண்டு கவிஞர் புதுயுகன் வடித்திருக்கும் வரிகள் மனதைத் தொட்டுவிட்டன.

"அங்கிங்கெனாதபடி இங்கிலாந்தில்"...என்ற புதுயுகனின் தொடர் காவியம் நிறைவுற்றது என்பதை மனம் ஒப்பவில்லை.

வேறொரு வடிவத்தில் அவரின் எழுத்தோவியத் திற்காகக் காத்திருக்கிறேன் அடியேன்.

தொடர்ந்து எழுதிய கவிஞர் புதுயுகனுக்கும், தொடர்ந்து வெளியிட்ட ஆசிரியர் முனைவர் ந. அருள் அவர்களுக்கு, வாசித்து மகிழ்ந்தவர்களுக்கும் நன்றி.... நன்றி.

ஆசிரியர் உட்பட உலகத் தமிழ் இணைய இதழின் படைப்பாளர்கள், படிப்பாளர்கள் அனைவருக்கும் பிறந்திருக்கும் 2021-புது வருட புது வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

கவிஞர் பேரா,
தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருதாளர்,
திருநெல்வேலி.

2. பாவை பற்றிய கட்டுரை அருமை.
அமெரிக்க மாநிலங்களில் புத்தாண்டுக் கொண்டாட்டம் பற்றி அறிந்தோம்.
பன்றி பற்றிய நம்பிக்கை வியப்பைத் தந்தது.
ஜே.கே.ரோலிங், ஷண்பகப்பூ பற்றிய தகவல்களை அறிந்தோம்.

முனைவர் தேவி நாச்சியப்பன்

3. *Aasiriyam is striking; as ever it is the Leader. In this number, it excels. Like a boat moving downstream, the Maargazhippaavai traces literary ordinates in Tamil tradition in respect of the sacred Maargahi foreseeing Celestial and Terrestrial events yet not compelling them. Fine gold florin.*

In Pathikangalai Patiyungal, the highlight word அமளி *(dawn as floral foam to enflower rolling on to the whole day ahead), without circumlocution, helps see things neither mind can hold nor tongue utter. Ref Ulagattamizh 30/12/2020 Pathikangalai Patiyungal .. Aadiyum Antamum..*

Great Start after a year's completion:
Irresistibly drawn to Tiruvempaavai
Without Beginning without End
flaming lumen dear great we hymn;
having heard us sing, as though,
O, maid of lustrous long eyelashes,
why sleep still!
Do thine ears act stone deaf!
Hearing feebly the sound of our praising
the ample anklets adorned holy feet pair of Mahadeva, up and down the street, a maid of our flock sobbed, whimpering, from off her floral foam bed rolled and fell down unconscious on the floor in a swoon! How strange is she, see!

Dear Dr Arul

A Suggestion:

Now after a year's completion,
Ulagattamizh can feature i
A Review Essay for every number,
A complementary write up to Aasiriyam,
the Leader.

A university scholar may do that
giving a polite
recap of the contents,

throwing light on their style and purpose. This will help the readership and will be a sort of guided comprehension.

….. Prof.S.A.Sankaranarayanan,
Kumbakonam

4. தொடர்க நல்வழியில் நாடு போற்றிட

..... பேராசிரியர் முனைவர் ஜானகி,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

5. புத்தாண்டு அன்று அமெரிக்கர்கள் பன்றி கறி தின்பதன் விளக்கம் இந்த கட்டுரையைப் படித்ததும் தான் தெரிந்தது. மிக்க நன்றி.

.....திரு. சிதம்பரம், சென்னை

6. அமெரிக்க கட்டுரைகளில் அவர்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை படிக்கும் போது உலக மக்களிடையே உள்ள ஒருமித்த கருத்துக்கள் வெளிப்படுகிறது.

.....திரு. தியாகராஜன், சென்னை

7. புது வருட தீர்மானங்கள் பற்றிய செய்தி சுவையானது, உண்மையும் கூட!

.....திரு. வீ. கண்ணப்பன், புதுச்சேரி

8. ஐம்பத்தாறாம் உலகத் தமிழிதழ் அழகு மிக அமைந்தமைக்கு அட்டைப் படமே கட்டியங் கூறுகிறது. அந்திவானச் செம்மை அழகுற ஆற்று நீரில் தோற்றுகின்ற அழகுக் காட்சி அருமை.

திருப்பாவை, திருவெம்பாவை பாடல்கள் குறித்த மார்கழிப் பாவை கட்டுரையில் ஆசிரியர், தித்திக்கும் தேன்சுவை கொண்ட அந்த இலக்கியங்கள் குறித்துத் திறம்பட, சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார்.

மூதறிஞர் கந்தசாமி அவர்கள் முற்றிய நற்றமிழறிவால், கணநேரத்தில் கம்ப ராமாயணப் பாடல் கூறி, காந்தியை இழந்த நேருவின் துயரை ஒப்பிட்டுக் காட்டிய நிகழ்வு, ஒப்பில்லா ஒண்டமிழின் உயர்வு!

முனைவர் சோமலெ அவர்களின் புத்தாண்டுக் கொண்டாட்டம் குறித்த கட்டுரை சிறப்பாகவும், சுவையாகவும் இருந்தது; குறிப்பாக, புத்தாண்டு உறுதிமொழிகள் குறித்த பதிவு, புன்முறுவல் பூக்கச் செய்தது.

மறைமலை அடிகள் குறித்த கட்டுரையில் அறிஞர் முருகவேள் அவர்கள் 'தாய் வயிற்றிருந்தே தாயம் எய்தினன்' என்ற இலக்கிய வரிகளை மிகச் சிறப்பாக எடுத்தாண்டிருக்கிறார். உரைவேந்தர் ஐயா அவர்களின் உயர்வான கட்டுரையானது, தேன்தமிழ்ப் பாடல்களுடன் தித்திக்கும் சுவையைத் தெவிட்டாது ஊட்டுகிறது.

திருமதி சீதை அவர்கள் திருவெம்பாவைப் பாடல் காட்சியையும் அதன் நகைச்சுவை மாட்சியையும் தன் கட்டுரையால் நம் கண்முன்னே காட்சியாக விரிக்கிறார்! அக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள அழகிய படம் அதற்கு மெருகூட்டுகிறது.

அண்மையில் இங்கிலாந்து சென்று, ஆறேழு திங்கள் அங்கு தங்கியிருந்தும், கரோனா கட்டுப்பாடால் நாங்கள் கண்டு களிக்க முடியாமற் போன அந்நாட்டின் அழகினையும், செய்திகளையும் அழகுடன் தொகுத்தளித்த கவிஞர் புதுயுகன் அவர்களின் அருமையான கட்டுரை, எமது சிந்தைக்கு நிறைவு தந்து, சிறப்புடன் நிறைவெய்தி உள்ளது. அவருக்கு அன்புடன் நன்றி.

..... திரு.துரை தனபாலன்
தலைவர்,
தமிழ் ழகரப் பணி மன்றம், பட்டிவீரன்பட்டிக் கிளை

Tamil Translation of Shakespeare Works

Dr.N.Arul

3

5. MEASURE FOR MEASURE

Sl. No.	Topic	Author	Year	Publication	Mode
1.	Tanniyirppol Mannuyir Ninai	S.M. Natesa Sastri	1893	Srinivasa Varadachary Company, Madras	Adaptation
2.	Sarikku Sari	K. Appathurai	1910	Saiva Siddantha Publication, Madras	Story form
3.	Isabella Kadai	T.S.D. Swami	1912	Hindu Educational Trading Company, Kumbakonam	Translation
4.	Pallukkuppal	Anandan	1958	Tamilakam, Madras	Story form
5.	Maanam Katha Mangai	C.K. Chenna Kesavulu	1966	Royan Publishing House, Madras	Story form

6. MUCH ADO ABOUT NOTHING

Sl. No.	Topic	Author	Year	Publication	Mode
1.	Siru Pilayal Nerntha perum thollai	K. Appathurai	1910	Saiva Siddantha Publication, Madras	Story form
2.	Thinai Paniyagam	G. Sundaram	1922	Vidya Vinodhini Press, Trichur	Translation
3.	Veru Murasu	V.Shanmuga sundaram & P. Thandavarayan	1957	Sri Magal Company, Madras	Translation
4.	Nirapprathi	Anandan	1958	Tamilakam, Madras	Story form
5.	Elilarasi Hera	Jeyaseeli Ammal	1962	Christian Literature Society, Madras	Story form
6.	Onrumilla Amali	Su. Ganesamurthy	1969	Star Pirasuram, Madras	Translation

7. MIDSUMMER NIGHT'S DREAM

Sl. No.	Topic	Author	Year	Publication	Mode
1.	Naduvenir	S. Narayanasamy Iyer	1893	National Press, Tanjore	Translation
2.	Oru Venir Kalathu NallirutuKanavu	Narayanasamy Pillai	1894		Translation
3.	Naduvenir Kanavu	K. Appathurai	1910	Saiva Siddantha Publication, Madras	Story form
4.	Kadal Kanavu	Anandan	1958	Tamilakam, Madras	Story form

திரு.அறிவரசன், தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புத்துறையில் துணை இயக்குநராக அரும்பணியாற்றியவர். அவர் தொகுத்து வைத்திருந்த அகராதிச் சொற்களை அவர் நினைவாக வெளியிடுகிறோம்.

3

41	Adultery	கூடாஒழுக்கம், பிறர்மனை நயத்தல்
42	Agreements	ஒப்பந்தங்கள்
43	Anomalous	ஒழுங்கற்ற, ஒழுங்கு மீறிய, பொது நிலை திரும்பிய
44	Authentication	மெய்யொப்பம்
45	Adjudication	வழக்குத் தீர்ப்பு
46	Appealate	மேல்முறையீடு பற்றிய
47	Associated	இணைவான, தொடர்புடைய
48	Agitation	போராட்டம்
49	Abrading	தோய், அராவு, சுரண்டு
50	Appertaining	உரித்தாயிரு, சார்ந்திரு, பொருத்தமாயிரு, தொடர்புடையதாயிரு
51	Alignment	ஒழுங்குபடுத்துதல், வரிசைப்படுத்துதல்
52	Attested	அறிவுச் சான்று, சான்றுக்கையெழுத்திடும் சாட்சி
53	Aggressive	வலியத் தாக்கும் அளவிற்கு
54	Alcoholic	வெறியம் கலந்த
55	Adverse seasonal conditions	பாதகமான பருவ நிலைமைகள்
56	Appreciable consequence	கணிசமான விளைவுகள்
57	Agricultural Calender	வேளாண்மை விவரப்பட்டி
58	Alien Govt	வெளிநாட்டு அரசு
59	Associate member	தொடர்புபடுத்தப்பட்ட உறுப்பினர்
60	Artery	தமலி

தொடர்புக்கு

ulagathamizh@gmail.com

பார்வைக்கும்... படிப்புக்கும்...

www.facebook.com\ulagathamizh

www.twitter.com#ulagathamizh

www.ulagatamil.in

www.utsmdu.org

ulagathamizh.blogspot.com